## சிறப்பு குடும்ப வன்முறை தடுப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கோயமுத்தூர்.

முன்னிலை- **செல்வி.N.திலகேஸ்வரி, B.Sc., L.L.M.,**
சிறப்பு குடும்ப வன்முறை தடுப்பு நீதித்துறை நடுவர்,
கோயமுத்தூர்.

2020 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் நாள் திங்கட்கிழமை

**DVA No.116/2019**

திருமதி.V.சுகன்யா (29/20)
க/பெ.ரமேஷ்குமார் ... மனுதாரர்

**// எதிர் //**

1. திரு.R.ரமேஷ்குமார் (34/20)
   த/பெ.ராஜு
2. திரு.R.ராஜு (61/20)
   த/பெ.ரங்கசாமி
3. திருமதி.மோகன செல்வி (57/20)
   க/பெ.ராஜு
4. திருமதி.மேனகா (36/20)
   க/பெ.அசோக்குமார் ... எதிர் மனுதாரர்கள்

இந்த வழக்கானது 27.06.2019 ம் தேதி DVA No.116/2019 என குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.I, கோவை நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, விசாரணையிலிருந்து வந்த நிலையில் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதிபதி அவர்கள் உத்தரவு எண். 3651/2019, நாள் 27.08.2019 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 18.09.2019 ம் தேதியன்று DVA No.116/2019 என வழக்குக் கோப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இறுதியாக 13.03.2020 ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.T.ராமசந்திரன் மற்றும் திரு.N.ரவிகுமார் அவர்களும், எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டும் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகததால் அவர்கள் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு, அவர்கள் மீது ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்களைப் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் உத்தரவு.

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரரால் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005, பிரிவு 12-ன் கீழ் வரும் பிரிவுகள் 18,19,20,21 மற்றும்

22ன் படியும், குற்றவியல் நடைமுறைச்சட்டம் 200-ன் படியும் (அ) எதிர்மனுதாரர்கள் குடும்ப வன்முறை குற்றங்கள் செய்யாமலிருக்கவும், குடும்ப வன்முறை குற்றங்களை செய்வதற்கு உதவுவதோ அல்லது உடந்தையாக இருத்தலோ கூடாது எனவும், பாதுகாப்பு கட்டளையில் குறிப்பிட்டுள்ள மற்ற செயல்களை செய்யாதிருக்கவும், (ஆ) மனுதாரர் வீட்டில் எந்தப் பகுதியில் வசிக்கிறாரோ அதிலோ அல்லது அதன் பகுதி எதிலுமோ அல்லது மனுதாரர் பொது இடங்களிலோ எதிர்மனுதாரர்களோ அல்லது அவர்களது உறவினர்களோ அத்து மீறு நுழைந்து தடை செய்யாதிருக்கவும் மற்றும் தொந்தரவு செய்யாதிருக்கவும், (இ) மனுதாரர் வசிப்பதற்கு மற்றும் குடியிருப்பு ஏற்படுத்தித் தருவதுடன் அதற்குரிய வாடகையினை அளித்திடவும், (ஈ) எதிர்மனுதாரர்களால் எடுத்துக்கொள்ளப்பட்ட மனுதாரரின் 70 பவுன் நகைகளையும், வரதட்சணையாக கொடுக்கப்பட்ட ரூ.5,00,000/- ரொக்கத்தையும், கல்யாண செலவுக்காக செய்யப்பட்ட செலவு ரூ.6,50,000/-மும், வீட்டிற்கு தேவையான பொருட்கள் மற்றும் அவ்வப்போது ஏனைய செலவுகளுக்காக கொடுக்கப்பட்ட பணம் ரூ.50,000/- ஆக அனைத்தையும் மனுதாரருக்கு திரும்ப ஒப்படைக்கவும், (உ) மனுதாரரின் அத்தியாவசியத் தேவைகளுக்கும், மருத்துவ செலவுகளுக்கும் மற்றும் பராமரிப்பு தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.25,000/- வழங்க வேண்டும் என்றும், (ஊ) மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சல், வலி மற்றும் காயங்களுக்கு இழப்பீடாக ரூ.20,00,000/- வழங்க உத்தரவிடுமாறும் மற்றும் (எ) இவ்வழக்கின் சூழ்நிலைக்கு ஏற்ப உகந்ததென கருதும் இன்னபிற பரிகாரங்களையும் வழங்கி உத்தரவிடுமாறும் வேண்டி இம்மனுவை மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>**:

இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகிய இருவருக்கும் கடந்த 21.10.2018ம் தேதியன்று இந்து முறைப்படி பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின்போது மனுதாரருக்கு அவரது பெற்றோர் 70 பவுன் நகையும், வீட்டு உபயோகப் பொருட்களும் அதுபோக திருமணம் மற்றும் வரவேற்பிற்கும் ரூ.6,50,000/- வரை செலவுகள் செய்ததாகவும்,

திருமணத்திற்கு பிறகு 26.10.2018 அன்று மனுதாரரை மறுவீடு அழைக்க வந்த எதிர்மனுதாரர்கள், மனுதாரரது பெற்றோர்களிடம் 1ம் எதிர்மனுதாரர் தொழில் தொடங்க ரூ.5,00,000/- பணம் தேவைப்படுவதாக கூறியதால் வேறுவழியின்றி மனுதாரரின் பெற்றோர்கள் அவர்களது உறவினர்களிடம் கடன் வாங்கி ரூ.5 லட்சத்தை கொடுத்ததாகவும், மனுதாரர் அவரது பெற்றோரை பிரிந்து வந்ததால் அவர்களின் நினைவால் சோர்ந்து கண்களில் நீர் ததும்பியதைப் பார்த்த 1 எதிர்மனுதாரரின் சகோதரியான மேனகா மனுதாரரைக் கெட்டவார்த்தைகளால் கேவலமாக திட்டியதுமட்டுமல்லாமல், அன்றிரவு மனுதாரரை அவர்கள் வீட்டுக்கு வெளியே செருப்பு வைக்கும் இடத்தில் படுத்து துாங்கச் சொன்னதாகவும், மேலும் மனுதாரரின் பெற்றோர் கொடுத்த பணத்தை தொழில் தொடங்குவதற்கு பயன்படுத்தாமல் வீண் செலவு செய்ததை மனுதாரர் எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு பெல்டால் அடித்தும், திட்டியும் துன்புறுத்தியுள்ளார்கள் என்றும், மனுதாரரின் நகைகளான 70 பவுனும் 4ம் எதிர்மனுதாரர் பேங்க் லாக்கரில் வைப்பதாய் கூறிவிட்டு, அவரது கணவர் வீட்டிற்கு எடுத்துச் சென்றிருக்கிறார் என்றும், இதற்கிடையில் மனுதாரர் சரியாக சாப்பிடாமல் உடல்நலம் பாதிப்படைந்ததால் கோவையில் உள்ள அவரது பெற்றோர் வீட்டின் வாசலில் 3 மாதம் கழித்து வந்து அழைத்துச் செல்வதாய் கூறிவிட்டு விட்டுவிட்டுச் சென்றதாகவும், பின்னர் மனுதாரரின் பெற்றோர்கள் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களுக்கு போன் செய்து கேட்டதற்கு கோவையில் தொழில் தொடங்கிய பின்னர் வீடு பார்த்துவிட்டு மனுதாரரை அழைத்துச் செல்வதாக கூறியதாகவும், பின்பு விசாரித்தபோது, 1ம் எதிர்மனுதாரருக்கு மற்றொரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதை அறிந்து மற்ற எதிர்மனுதாரர்களிடம் கேட்டபோது, அதற்கு அவர்கள் ஒரு ராயல் என்பீல்டு புல்லட் பைக்கும், மேற்கொண்டு 50 பவுன் நகையும், ரூ.5,00,000/-ம் ரொக்கமாக தரவேண்டும் என்றும், அது மட்டுமன்றி கோவையில் ஒரு சொந்த வீடும் வாங்கி தந்தால் தான் மனுதாரருடன் 1ம் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ்வார் என கூறியதாகவும், மேலும் கடந்த 11.01.2019ம் தேதியன்று மனுதாரர் வேலை செய்யும் இடத்தில் 1ம் எதிர்மனுதாரர் சென்று மனுதாரரை கத்தியால் கையை கிழிப்பதற்கு முயற்சித்ததால் அவ்வேலையும் மனுதாரர் விட்டுவிட்டார் என்றும்,

மேலும் எதிர்மனுதாரர்கள் மிகுந்த செல்வாக்கு கொண்டவர்கள் என்பதால் மனுதாரர் 05.04.2019 ம் தேதியன்று துடியலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தும் தங்களின் செல்வாக்கினை பயன்படுத்தி இன்றைய தேதிவரையில் விசாரணைக்கு வராமல் இருந்து வருவதாகவும், மேலும் 1ம் எதிர்மனுதாரர் தற்சமயம் விவசாயத்தின் மூலம் நல்ல வருமானம் ஈட்டி வருகிறார் என்றும், மனுதாரர் புகுந்த வீட்டில் மிகுந்த கொடுமைகளையும், துன்பங்களையும் அனுபவித்து வந்துள்ளார் என்றும், தற்போது மிரட்டல்கள் தொடர்வதால் மனுதாரர் மிகுந்த பயத்தோடு வாழ்ந்து வருவதாகவும், எனவே மனுதாரர் சமூகம் நீதிமன்றத்தை நாடி இந்த புகார் மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆகையால் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் பிரார்த்திப்பது என்னவென்றால், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005-ன் கீழ்

(அ) எதிர்மனுதாரர்கள் குடும்ப வன்முறை குற்றங்கள் செய்யாமலிருக்கவும், குடும்ப வன்முறை குற்றங்களை செய்வதற்கு உதவுவதோ அல்லது உடந்தையாக இருத்தலோ கூடாது எனவும், பாதுகாப்பு கட்டளையில் குறிப்பிட்டுள்ள மற்ற செயல்களை செய்யாதிருக்கவும்,

(ஆ) மனுதாரர் வீட்டில் எந்தப் பகுதியில் வசிக்கிறாரோ அதிலோ அல்லது அதன் பகுதி எதிலுமோ அல்லது மனுதாரர் பொது இடங்களிலோ எதிர்மனுதாரர்களோ அல்லது அவர்களது உறவினர்களோ அத்து மீறி நுழைந்து தடை செய்யாதிருக்கவும் மற்றும் தொந்தரவு செய்யாதிருக்கவும்,

(இ) மனுதாரர் வசிப்பதற்கு மற்றும் குடியிருப்பு ஏற்படுத்தித் தருவதுடன் அதற்குரிய வாடகையினை அளித்திடவும்,

(ஈ) எதிர்மனுதாரர்களால் எடுத்துக்கொள்ளப்பட்ட மனுதாரரின் 70 பவுன் நகைகளையும், வரதட்சணையாக கொடுக்கப்பட்ட ரூ.5,00,000/- ரொக்கத்தையும், கல்யாண செலவுக்காக செய்யப்பட்ட செலவு ரூ.6,50,000/-மும், வீட்டிற்கு தேவையான பொருட்கள் மற்றும் அவ்வப்போது ஏனைய செலவுகளுக்காக கொடுக்கப்பட்ட பணம் ரூ.50,000/- ஆக அனைத்தையும் மனுதாரருக்கு திரும்ப ஒப்படைக்கவும்,

(உ) மனுதாரரின் அத்தியாவசியத் தேவைகளுக்கும், மருத்துவ செலவுகளுக்கும்

மற்றும் பராமரிப்பு தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.25,000/- வழங்க வேண்டும் என்றும்,

(ஊ) மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சல், வலி மற்றும் காயங்களுக்கு இழப்பீடாக ரூ.20,00,000/- வழங்க உத்தரவிடுமாறும் மற்றும்

(எ) இவ்வழக்கின் சூழ்நிலைக்கு ஏற்ப உகந்ததென கருதும் இன்னபிற பரிகாரங்களையும் வழங்கி உத்தரவிடுமாறும், இம்மனுவில் மனுதாரர் வேண்டிக் கொள்கிறார்.

3. இந்நீதிமன்றம் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு எடுத்துள்ளது.

4. 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டும், அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவும் இல்லை, எதிருரை எதுவும் தாக்கல் செய்யவும் இல்லை.

5. மனுதாரர் தரப்பில் மனுதாரர் சுகன்யா என்பவரை மட்டும் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சாண்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனுவில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

ம.சா.1 ஆக முதல் மனுதாரர் அளித்துள்ள சாட்சியத்தின் படி திருமணம் ஆனது முதலே 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மனுதாரரைத் திட்டி கொடுமைப்படுத்தி அவரை வீட்டை விட்டு பெற்றோர் வீட்டிற்கு விரட்டியுள்ளனர். அதன் மூலம் முதல் மனுதாரரை உடலளவிலும், மனதளவிலும் துன்புறுத்தி அவருக்கு கொடுமை செய்துள்ளனர் என்பது தெரிய வருகிறது. ம.சா.ஆ.1 மற்றும் 4ன் மூலம் மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடந்துள்ளது

என்பது நிரூபணம் ஆகிறது. மேலும் ம.சா.ஆ.2-ன் மூலம் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் மீது குடும்ப சண்டையின் காரணமாக 05.04.2019ம் தேதியில் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்பது தெரிய வருகிறது. இதன்மூலம் மனுதாரர் இவ்வழக்கில் குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளதை நிரூபணம் செய்துள்ளார் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரர் தனது மனுவில் தனக்கு திருமணத்தின்போது 70 பவுன் நகை போட்டதாகவும், அவற்றை எதிர்மனுதாரர்கள் வசம் இருப்பதாகவும், அவற்றையும் திருமணத்தின்போது கொடுக்கப்பட்ட ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ரொக்கத்தையும் மற்றும் திருமணச் செலவு ரூ.6,50,000/-ம், வீட்டு உபயோக பொருட்கள் வாங்குவதற்கு கொடுத்த ரூ.50,000/-ம் திருப்பி கொடுக்குமாறு பரிகாரம் வேண்டியுள்ளார். மேலும் மனுதாரர் தனது மனுவில் தனக்கு திருமணத்தின்போது போடப்பட்ட 70 பவுன் நகைகளின் பட்டியல் பற்றி எதுவும் குறித்து குறிப்பிடப்படவில்லை. மேலும் 70 பவுன் நகைகள் வாங்கப்பட்டதற்கான ரசீதுகளோ, ரூ.5,00,000/- வரதட்சணையாக கொடுக்கப்பட்டதற்கும், திருமணச் செலவு ரூ.6,50,000/- செய்ததற்கும், வீட்டு உபயோக பொருட்கள் வாங்குவதற்காக ரூ.50,000/- கொடுக்கப்பட்டதற்கும் ஆவண சாட்சியங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மனுதாரர் தரப்பில் திருமணத்தின்போது போடப்பட்ட 70 பவுன் நகைகள் கொடுக்கப்பட்டதும், ரொக்கமாக ரூ.5,00,000/- வரதட்சணையாக கொடுக்கப்பட்டதற்கும், திருமணச் செலவு ரூ.6,50,000/- செய்ததற்கும், வீட்டு உபயோக பொருட்கள் வாங்குவதற்காக ரூ.50,000/- கொடுக்கப்பட்டது சம்மந்தமாகவும் போதிய சாட்சியங்கள் மூலம் சரிவர நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**7.** 4ம் எதிர்மனுதாரர் மஸ்கட்டில் வசித்து வருவதாக மனுதாரரே தனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார். எனவே குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் 2(f) பிரிவின் படி 4ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் குடும்ப இல்லத்தில் வசிக்காத காரணத்தினால் அவருக்கு எதிராக இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. மனுதாரர் தன்னுடைய மனுவில் 1ம் எதிர்மனுதாரர் துபாயில் வேலை பார்ப்பதாக மட்டுமே கூறியுள்ளார். ஆனால் அவர் என்ன படித்துள்ளார், எங்கு பணிபுரிகிறார், என்ன சம்பளம் வாங்குகிறார் என்ற விவரங்களை மனுவில் குறிப்பிடவில்லை. அதற்கான ஆவண சாட்சியங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இருந்தபோதிலும் இந்நீதிமன்றம் 1ம் எதிர்மனுதாரர் சராசரி மாத வருமானமாக ரூ.20,000/- வரை சம்பாதிக்க முடியும் என்றே கருதுகிறது.

9. **இறுதியாக,** இந்நீதிமன்றம் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் பொறுத்து இம்மனுவை பகுதியாக அனுமதித்து,

(அ) 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு எதிராக குடும்ப வன்முறை எதுவும் நிகழ்த்தக்கூடாது என பாதுகாப்பு உத்தரவு வழங்கியும்,

(ஆ) மனுதாரர் வீட்டில் எந்தப் பகுதியில் வசிக்கிறாரோ அதிலோ அல்லது அதன் பகுதி எதிலுமோ அல்லது மனுதாரர் பொது இடங்களிலோ 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அத்து மீறி நுழைந்து தடை செய்யாதிருக்கவும் மற்றும் தொந்தரவு செய்யாதிருக்க வேண்டும் என உத்தரவு வழங்கியும்,

(இ) 1ம் எதிர்மனுதாரர் தான் வசிக்கும் வீட்டின் வசதிகொண்ட வாடகை வீட்டை மனு உத்தரவு தேதியிலிருந்து 2 மாதத்திற்குள்ளாக ஏற்பாடு செய்து முன்பணம் கொடுத்து வாடகையையும் கொடுத்து வரவேண்டும் என்றும்,

(ஈ) மனுதாரர் தரப்பில் திருமணத்தின்போது போடப்பட்ட 70 பவுன் நகைகளும், ரூ.5,00,000/- வரதட்சணையாக கொடுக்கப்பட்ட ரொக்கமும், திருமணச் செலவு ரூ.6,50,000/-ம், வீட்டு உபயோக பொருட்கள் வாங்குவதற்காக கொடுக்கப்பட்ட ரூ.50,000/-ம் ஆகியவவை திரும்ப கேட்கும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

(உ) மனுதாரரின் அத்தியாவசியத் தேவைகளுக்கும், மருத்துவ செலவுகளுக்கும் மற்றும் பராமரிப்புத் தொகையாக 1ம் எதிர்மனுதாரர் மனு தேதியிலிருந்து மனுதாரருக்கு மாதாமாதம் ரூ.5,000/-(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மாத ஜீவனாம்சமாக கொடுத்து வரவேண்டும் என்றும்,

(ஊ) 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு நஷ்டயீடாக ரூ.2,00,000/-ஐ

(ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மனு உத்தரவு தேதியிலிருந்து 2 மாதத்திற்குள்ளாக வழங்க வேண்டும் எனவும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2020 ம் வருடம் மார்ச் மாதம் 16 ம் நாள் திங்கட்கிழமையன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- N.திலகேஸ்வரி
நீதித்துறை நடுவர்,
சிறப்பு குடும்ப வன்முறை
தடுப்பு நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்:**

ம.சா.1. திருமதி. சுகன்யா

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

**ம.சா.ஆ.1** திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்பட அசல் (எண்ணிக்கை 2)

**ம.சா.ஆ.2** 05.04.2019 ம் தேதியன்று துடியலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனுதாரர் அளித்த புகாருக்கான மனு ஏற்பு ரசீதின் நகல்

**ம.சா.ஆ.3** மனுதாரரின் ஆதார் அட்டையின் நகல்

**ம.சா.ஆ.4** திருமண வரவேற்பு அழைப்பிதழ்

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை**

ஒம்/- N.திலகேஸ்வரி
நீதித்துறை நடுவர்,
சிறப்பு குடும்ப வன்முறை
தடுப்பு நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

நகல்:
1. மனுதாரர்
2. பாதுகாப்பு அதிகாரி அலுவலர், கோவை.
3. காவல் ஆய்வாளர், துடியலூர் காவல்நிலையம், கோவை.